இல்லாததால் விதிகளின்படி திருத்தத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

இப்பொழுது முழுமுதற் தீர்மானம்---திரு. எம். எஸ். மணி அவர்களுடைய தீர்மானம். அதாவது, '1967-ஆம் ஆண்டு, மார்ச்சு திங்கள், 17-ஆம் நாளன்று இரண்டு அவைகளும் சேர்ந்த சட்ட மன்றக் கூட்டத்தில் கவர்னர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு, தமிழ் நாடு சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

5. அறிவிப்புகள்---(தொடர்ச்சி)

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: அடுத்து அறிவிப்புகள். மேலவைத் தலைவரிடமிருந்து கிடைத்துள்ள செய்திகளைப்பற்றி மூன்று அறிவிப்புகள் உள்ளன.

(இ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவும்---அதாவது 1 இலக்கமிட்ட பேரவை மசோதாவும்---1967-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவும் அதாவது 4 என்ற இலக்கமிட்ட மசோதாவும்---28-3-1967 அன்று எவ்வித மாறுதலும் இல்லாமல் மேலவையில் நிறைவேற்றப்பட்டன என்றும் 1967-ம் ஆண்டு பேரவை---(தகுதியின்மை நீக்கல்) மசோதா---அதாவது 3 என்ற இலக்கமிட்ட பேரவை மசோதா---20-3-1967 அன்று எவ்வித திருத்தமும் இல்லாமல் நிறைவேற்றப்பட்டது என்றும் மேலவையின் தலைவரிடமிருந்து செய்திகள் வந்துள்ளன.

(உ) பொதுக் கணக்குக் குழுவிற்கு மேலவை உறுப்பினர்களைச் சேர்த்தல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: 1967-68-ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்கு ஆய்வுக் குழுவுக்கு பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி—உறுப்பினர்களாகக் கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள செய்தி கிடைத்திருக்கிறது:—

1. திரு. என். ஆர். தியாகராஜன்
2. திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர்
3. திரு. எஸ். ராஜமார்த்தாண்டன்
4. திரு. என். வி. நடராசன்
5. திரு. ஏ. ஆர். தாமோதரன்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS